# பொதுச் சாலை ஒதுக்குப் புறத்தில்
# 9 சட்டவிரோத தலங்கள் இடிக்கப்பட்டன!

நமது நிருபர்

கோலாலம்பூர், ஜன.9-

புக்கிட் பிந்தாங் சுற்றுப் பகுதிகளிலுள்ள பொதுச் சாலையில் சட்டவிரோதமாகக் கட்டமைக்கப்பட்டவற்றை இடிப்பதில் ஒப்ஸ் பெர்செப்பாடு நடவடிக்கையை அமலாக்கத் துறை வாயிலாக கோலாலம்பூர் மாநகர் மன்றம் மேற்கொண்டது.

இயந்திரவியல் மற்றும் மின் பொறியியல் துறை, நேர்மைத் துறை, சுகாதார மற்றும் சுற்றுச்சூழல் துறை, தேசிய போலீஸ் படை, டினன்பி, ஷாபாஸ், திடக்கழிவு மற்றும் பொதுத் தூய்மை அமைப்பு, அலாம் புளோரா ஆகியவற்றுடன் இணைந்து இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பொதுச் சாலை மற்றும் கால்வாய் ஆகியவற்றை மூடும் அளவுக்குக் கூடுதலான கட்டமைப்பு நிர்மாணிக்கப்பட்ட 9 வர்த்தகத் தலங்கள் இந்நடவடிக்கையில் இடிக்கப்பட்டன.

இதில் இன்னும் கூடுதலான 2 தலங்கள் சொந்தமாக நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

அதோடு மட்டுமின்றி பொருட்களைப் பொது இடங்களில் வைத்த குற்றத்திற்காக 1974 சாலை, கால்வாய் மற்றும் கட்டடச் சட்டத்தின் கீழ் 7 பறிமுதல் நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டன.

இந்த இடிக்கும் நடவடிக்கை முடிவுற்றதும் அனைத்துக் கழிவுகளும் அழிக்கப்பட்டன.

இதில் பறிமுதல் செய்யப்பட்ட அனைத்துப் பொருட்களும் பதிவு மற்றும் ஆவணப்படுத்தலுக்காக தாமான் மிஹார்ஜா செராசிலுள்ள பறிமுதல் கிடங்கிற்குக் கொண்டு செல்லப்பட்டன.

ஆகையால், அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் கண்காணிப்பு நடவடிக்கைகள் அவ்வப்போது மேற்கொள்ளப்படும் என்று தனது முகநூலில் மாநகர் மன்றம் குறிப்பிட்டது.

